அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 06/2017

எனது இலக்கம் : EST-2/05/POL/0059

அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2017.10.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரச கரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துதல்**

மேற்குறித்த விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2014.12.22. ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக் கடிதம் 07/2014 இன் 02 ஆம் பந்தியின் பால் உமது கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

02. அப் பந்தியினை கீழ்க் குறிப்பிட்ட வகையில் திருத்தியமைக்கின்றேன்.

" அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துதல்" என்னும் தலைப்பில் 2014.01.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய உரித்தான ஏனைய அரச மொழித் தேர்ச்சியினை அடையப் பெற்றுள்ள அலுவலர்களுக்கும், அம் மொழித் தேவை மாற்றீட்டுத் தகைமைகளை பூர்த்தி செய்துகொள்வதனால் விடுவிக்கப்படும் அலுவலர்கள் தொடர்பாகவும், திணைக்களத் தலைவர்களினால் அது தொடர்பாக உறுதிப்படுத்தியதன் பின்னர் அவ் அலுவலருக்கு அது பற்றி அறிவிப்பதும் அதன் பிரதியொன்றினை நியமன அலுவலருக்கு மேலதிகமாக நிர்வாக அலுவலரும் அறிந்துகொள்வதற்காக அனுப்புவது போதுமென இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்/ ஜே. ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு